**<u>06.02.2020 அ.வ.எண். 42/2005 வா.சா.1 ஏழுமலை</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

மாணிக்கபிள்ளை மற்றும் அம்மணி அம்மாள் ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்ட திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டடு நடந்தது என்றால சரிதான். மாணிக்கபிள்ளை மற்றும அம்மணி அம்மாள் ஆகியோர்களுக்க இடையே ஏற்பட்ட விவாகம் நீதிமன்றத்தில் மூலமாக ரத்து செய்யப்படவில்லை என்றால்சரிதான். மாணிக்கம் பிள்ளை மற்றும யசோதா ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்ட திருமணத்தில்நான் செல்லவில்லை. அந்த திருமணம கோயிலில் நடைபெற்றது. குறிப்பாக அந்த திருமணம் என்று நடந்தது என்று எனக்கு தெரியாது. அந்த திருமணம் ஆரணி சுப்பிரமணிய கோயிலில் நடந்ததா எனக்கு தெரியவந்தது. எனக்கு நேரடியாக அதைப்பற்றி தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பு யசோதா என்பவருக்கும மாணிக்கம்பிள்ளை என்பவசருக்கும் திருமணம் நடந்தது என்று குறிப்பிடடுள்ளேன் என்றும் நான் கேள்விப்பட்டதன்பேரில்அவ்வாறு குறிப பிட்டுள்ளேன் என்றால்சரிதான். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தநாளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பாக அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள் என குறிப் பிடடுள்ளேன் என்றால் சரிதான். கரிய பிள்ளை மற்றும் மேட்டுகுடி ஏழுமலை என்பவரும் ஆரணி சுப்பிரமண் கோயிலில் டைவத்து யசோதாவுக்கும மாணிக்கம் பிள்ளைக்கும் திருமணம் நடத்தி வைத்தனர். மாணிக்கம் பிள்ளை உயிரோடு இருந்த சமயத்தில்அவர் யசோதா என்பவரை அவரது முதல்மனைவி உயிரோடு இந்நத காலத்திலேயே இரண்டாவதமாக திருமணம்செய்து கொண்டது சம்மந்தமாக செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில மாணிக்கம் பிள்ளை யசோதா யசோதாவின் பெற்றோர் மற்றும சில நபர்களுக்கு எதிராக வழக்கு நடந்து வந்தது என்றால சரிதான். அம்மணி அம்மாள் என்பவா மாணிக்கம் பிள்ளைக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கு ஒன்றை ஆரணி மாவட்ட உரிமையியில நீதிமன்றத்தில வழக்கு ஒன்றை தொடர்ந்து அதை நடத்தினார் என்றால சரிதமான். மாணிககம் பிள்ளை உயிரோடு இந்நத காலம வரை அந்த வழக்கு சம்மந்தமான மேல்முறையீடு வழக்கும் உயர்நீதிமன்றத்தில நடந்தது வந்தது என்றால் சரிதான். மாமணிக்கபிள்ளை என்பவருக்கும அம்மணியம்மாள் என்பவருக்குமட இடையே விவாகம் ஏற்பட்டது சம்மந்தமாக நான் கேள்வட்டதை என் பிரமாண வாக்கமூலத்தில்சொல்லியுள்ளேன். குறிப்பாக மாணிககம் பிள்ளை அம்மணியம்மாள் ஆகியோர்களுக்கு இடையே சமுதாய முறைப்படி எந்த தேதியில் யார்யார் முன்னிலையில விவாகரத்து ஏற்பட்டது ஏ்னறு எனக்குதெரியாது. நீதிமன்றத்தின் மூலமாக விவாகரதைத்து ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். எங்கள் ஊரில் வைத்து அவர்களுக்கிடையே விவாகரத்து ஏற்படவில்லை. மாணிக்கம் பிள்ளை இறந்த பிறகு யசோதா அம்மாள் என்னையும ஊரில் சில நபர்களையும அழைத்துக் கொண்டு கொடநல்லூர் கிராமத்தில் இருந்த அம்மணி யம்மா ள் என்பவரிடம் சொத்து சம்மந்தமாக சமரசம் பேச அழைத்துச் சென்றார். அம்மணியம்மாமள் சமரசத்திற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அந்த சமயத்தில் அம்மணியம்மாமள் 2ம் பிரதிவாதி ரத்தினப்பிள்ளை என்பவருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்திருந்தார் என்றால சரிதான். தாவா செ ாத்தின் மற்றொரு ப குதியை

ரத்தினப்பிள்ளை மகன் ஆதிகேசவனுக்கு விறற்பனை செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாணிக்கம் பிள்ளை இறந்தபிறகு அம்மனியம்மாள் 2 முதல் 11 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் மற்ற பகுதிகளை விற்பனை செய்துள்ளார் என்றும அதை கிரையம் பெ்ற் நபர்கள் அதை அனுபவித்து வருகிறார் என்றால ' சரிதான். மாணிகசம் பிள்ளைஎன்பவருக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்கள் மட்டுமே விற்பனை செய்யாமல் இருந்துவருகின்றன என்று சொன்னால் சரிதான். மாணிக்கம்மாள் இறந்த பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது சட்டப்படியான வாரிசான அம்மணியம்மாள் மட்டுமே பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். மாணிக்கப்பிள்ளை என்பவர் யசோதாயம்மாளை திருமணம் செய்து கொண்டதன் மூலமாக 5 பிள்ளைகள் பிறந்துள்ளனர் அவர்களுக்கும் சொத்ததுக்களில் பாத்தியம் உள்ளது. யசோதா என்பவர் சட்டத்திற்கு முரனாக மாணிக்கபபிள்ளை என்பவரை திருமணம் செய்துக்கொண்டதால் அவருக்கும் அவரது வாரிசுக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அம்மணியம்மாள் என்பவரிடம் நானும் எனது ஊரைச்சேர்ந்த நபர்களும் நீதிமன்றத்தின் மூலமாக பெறப்பட்ட உத்தரவின்படி செயல்பட வேண்டியதில்லை என்றும் எங்கள் ஊரின் பஞ்சாயத்தின் படி நாங்கள் எடுக்கும் முடிவுகளின் படி செயல்பட நாங்கள் அம்மணியம்மாளை வற்புறுத்தினோம் என்றால் சரிதான் ஆனால் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நான் ஊரில் கட்டப்பஞ்சாயத்து செய்வது வழக்கம் என்றும் நான் யசோதா என்பவருக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றேன் என்றும் நான் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரனை இல்லை.